JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.103/2021
PW.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்துசெல்வன் | தாலுகா | தென்காசி |
| தந்தை பெயர் | கடல்முருகன் | தொழில் | கடையில் வேலை |
| கிராமம் | ஐயனூர் | வயது | 23 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 04.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது ஐயனூரில் குடியிருந்து வருகிறேன். நான் கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அசா.1 சுந்தர்ராஜன், அசா.2 காளிராஜன், அசா.3 குமரேசன் ஆகியோர்களை தெரியும். வழக்கில் இறந்துபோன வருண்அகிலன் அத்தான். கடந்த 14.01.2021ம் தேதி நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் கடைக்கு சென்று கொண்டிதேன் எனக்கு முன்னால் வருண் அகிலன் அவருடைய இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார். சின்னநாடானூர் குடியிருப்பு அருகே மதியம் 01.30 மணியளவில் எதிரே வந்த நபர் இருசக்கர வாகனத்தை கொண்டு வருண் அகிலனின் இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டார். வருண்அகிலனுக்கு தலையில் அடிபட்டது. பின்னர் ஆம்புலன்ஸில் திருநெல்வேலிஅரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். எதிரே இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. பின்னர் மருத்துவமனையில் வருண் அகிலன் இறந்து விட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 14.01.2021ம் தேதியன்று மதியம் 1.30 மணியளவில் வழக்கில் இறந்துபோன வருண் அகிலன் தன்னுடைய இருசக்கர வாகனத்தில் சாலடியூர் ரோட்டில்

சென்றுக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி தன்னுடைய இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விஷயம் உண்மையென்றாலும் தற்போது ஆஜர் எதிரிக்கு பயந்து கொண்டு இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
மறுவிசாரணை– இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi